# மனித உரிமை பேரவையில் தமிழ்க் கூட்டமைப்பின் பங்கு காத்திரமானது



**போர்க்குற்றங்களால் பாதிக்கப்பட்டோருக்கு சர்வதேசகுற்றவியல் நீதிமன்றத்தினூடாக பயன்கிட்டப் போவது சாத்தியமற்றதென கூறும் தமிழ்தேசியகூட்டமைப்பின் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் தமிழ்தேசியக் கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளருமான எம்.ஏ.சுமந்திரன், அவ்வாறு இலங்கையைப் பாரப்படுத்தவேண்டும் என்று துடிப்பவர்களிடம் நயவஞ்சக நிகழ்சி நிரலொன்றிருப்பது மட்டும் வெளிச்சம் என்றார். அவர் தினகரன் வாரமஞ்சரிக்கு வழங்கிய விசேட செவ்வி.**

**ஐக்கிய நாடுகள் மனித உரிமைபேரவையில் இலங்கையின் பொறுப்பு கூறலும் கடப்பாடும் எத்தகையது?**

ஜெனீவா ஐக்கியநாடுகள் அலுவலகத்தை மையமாகக் கொண்டியங்கும் மனித உரிமைகள் பேரவை 2006 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்டது. இச்சபையில் 47 நாடுகள் அங்கம் வகிக்கின்றன. உலகளாவிய ரீதியில் மனித உரிமைகளை பாதுகாத்தல், பலப்படுத்துதல் மனித உரிமைகளை ஆராய்வது, சீர்படுத்த பரிந்துரைப்பது என்பவை இந் நிறுவனத்தின் முக்கிய பணிகள். இச்சபைக்கு சிபாரிசுகளை சொல்லவே முடியும். செயற்படுத்தும் அதிகாரங்கள் எதுவுமில்லை. ஆக மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றப்படும் தீர்மானங்கள் நிறைவேற்று அதிகார மற்றவை. தீர்மானத்தின் உள்ளடக்கங்களை செயற்படுத்துவது, குறித்த நாட்டின் பொறுப்பு. இலங்கையின் மீதான தீர்மானங்களும் இவ்வாறானவையே. போர் முடிந்து ஓரிரு வாரங்களுக்குள்ளே மனித உரிமைப் பேரவையில் பயங்கர வாதத்தை தோற்கடித்து விடுதலைப் புலிகளால் பணயக் கைதிகளாக வைக்கப்பட்டிருந்த ஆயிரக்கணக் கானோரை விடுவித்தமைக்காக இலங்கை அரசாங்கத்தை பாராட்டி ஒருதீர்மானம் நிறைவேற்றப்பட்டது. ஆனால் இலங்கை அரசாங்கம் தமிழர் நலன், மனித உரிமை தொடர்பில் கொடுத்த வாக்குறுதிகளை கடைப்பிடிக்காமலும் மேற்குலகோடு தொடர்ச்சியான முரண்பாடுகள், மனித உரிமைகள் சபையில் தமிழர் தரப்பினர் கொடுத்த தொடர் அழுத்தம் என்பவை 2012ஆம் ஆண்டில் இந்த நிலைமையை முற்றாக மாற்றிப்போட்டது. 2011 ஒக்டோபர், நவம்பர் காலப்பகுதியில் அமெரிக்க இராஜாங்க திணைக்களம் தமிழ் தேசியக்கூட்டமைப்பை அழைத்து தொடராக நடத்திய பேச்சுவார்த்தைகளின் விளைவாகவே மாற்றம் நிகழ்ந்தது. அதனடிப்படையில் 2012 ஆம் ஆண்டு அமெரிக்கா ஏனைய உறுப்பு நாடுகளுடன் சேர்ந்து இலங்கையில் இழைக்கப்பட்ட மனித உரிமை மீறல்களின் மீது உள்ளக விசாரணை நடத்தவேண்டுமென வலியுறுத்தி தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியது.

**2015ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட ஜெனீவாத் தீர்மானத்தின் முக்கிய அம்சங்கள் பற்றி கூறமுடியுமா?**

நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தில் (HRC30/1) தமிழருக்கு அவசரமாக தேவைப்படும் முக்கிய பல ஏற்பாடுகள் அடங்கியிருந்தன. இதில் பிரதானமானது இலங்கையில் இழைக்கப்பட்ட யுத்த மற்றும் மனித குலத்துக்கு எதிரான குற்றங்களை விசாரித்து குற்றவாளிகளை தண்டிக்க கலப்பு நீதிமன்றப்பொறிமுறை ஒன்றை ஏற்படுத்தவேண்டும் என்பதே. இதைத்தவிர தீர்மானத்தில் பயங்கர வாத தடைச் சட்டம் களையப்பட வேண்டும் அதற்கு பதிலாக சர்வதேச சட்டங்களை ஒத்த தோர் சட்டம் பிரதியிடப்பட வேண்டும்.

காணாமல்போனோரை கண்டுபிடிக்கும் பொறிமுறை உருவாக்கப்படவேண்டும். மனித உரிமைகளை மீறியோரை இராணுவத்தில் இருந்து அகற்றவேண்டும். உரிய உரிமையாளர்களிடம் காணிகளை மீளக்கையளிக்க வேண்டும். மக்களின் வாழ்க்கை சாதாரண நிலைமைக்கு திரும்பவேண்டும், அதிகாரப் பகிர்வை உறுதி செய்யும் அரசியலமைப்பு ஏற்பாடுகள் மூலம் அரசியற் தீர்வு எட்டப்பட வேண்டும். பாலியல் வன்முறைகள் மற்றும் சித்திரவதைகளுக்கு எதிராக உடனடி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமெனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

**ஜெனீவாத் தீர்மானத்தின் உள்ளடக்கங்களின் படி கூறியிருப்பது கலப்பு பொறிமுறையைத் தானா?**

ஆம். தீர்மானத்தின் உள்ளடக்கங்களின் படி பிரேரிக்கப்பட்டிருப்பது ஒரு கலப்பு நீதிப்பொறிமுறைதான் என்பதில் மாற்றுக்கருத்தில்லை. ஜெனீவாத் தீர்மானத்தின் செயற்பாட்டுப் பந்தி 1 இலங்கை அரசாங்கம் ஐ. நா மனித உரிமை ஆணையாளரது அறிக்கையின் பரிந்துரைகளை அமுல்படுத்த வேண்டுமென விதைந்துரைக்கின்றது.

கலப்பு நீதி மன்றம் அமைக்கப்படவேண்டும் எனச்சொல்லுகிறது. இதனுடன் சேர்ந்து செயற்பாட்டு பந்தி 6 பொதுநலவாய மற்றும் வெளிநாட்டு நீதிபதிகள் வழக்குத்தொடுனர்கள், சட்டத்தரணிகள் மற்றும் விசாரணையாளர்கள் நீதிப் பொறிமுறையில் பங்குபற்றுவதன் முக்கியத்துவத்தைப் பற்றிப் பேசுகிறது. செயற்பாட்டுப் பந்தி 6 இல், இலங்கை சர்வதேச குற்றங்களை, அதாவது யுத்தக் குற்றங்கள் மனிதகுலத்துக்கு விரோதமான குற்றங்கள் இனவழிப்பு என்பன இலங்கை சட்டத்திற்குள் சேர்த்துக் கொண்டு, இக் குற்றத்தின் உயர் பொறுப்பினை வகித்தவர்களை தண்டிக்க வேண்டும் எனக்குறிப்பிட்டிருந்தது.

கலப்பு நீதிமன்றம் தான் பரிந்துரைக்கப்பட்டுள்ளது என்பதை மேலும் தெளிவாக்கின்றது. இலங்கை அரசாங்கத்தின் முக்கிய தலைவர்கள் பலரும் இன்று சர்வதேச பங்களிப்பினை ஏற்கமாட்டோம் என்று வெளிப்படையாக தெரிவித்து வருவது நாம் அறிந்ததே. ஆனால் தீர்மானத்தின் உள்ளடக்கங்களைப் பற்றி புரிதலின்றி, தீர்மானம் உள்ளகப் பொறிமுறைஒன்றினைப் பற்றி மாத்திரமே பேசுகின்றது என நாமும் சொல்வோமானால், அது அரசாங்கத்தின் நழுவல்களுக்கும் எம் மக்களது தொடர்ந்த உத்தரிப்பின் மீது தம் அரசியலைக்கட்ட விளைவோருக்கும் துணைபோவதாயே அமையும். மாறாக நாம் இலங்கை அரசாங்கத்திற்கும் சர்வதேச சமூகத்திற்கும் தீர்மானங்களின் உள்ளடக்கங்களை முழுமையாக நடைமுறைப் படுத்துமாறு தொடர் அழுத்தங்களை பிரயோகிக்கவேண்டும்.

**இலங்கை அரசாங்கத்திற்கு வழங்கப்பட்ட கால அவகாசம் சரியானதா?**

2015 செப்டெம்பர் மாதம் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தில் இலங்கை பல்வேறு விடயங்கள் தொடர்பில் வாக்குறுதிகளை வழங்கியிருந்தது. இவை பிரதானமாக நிலைமாறு கால நீதி மற்றும் நல்லிணக்கம், சட்டவாட்சியும் பாதுகாப்பும், இராணுவ நீக்கமும் அதிகாரப்பகிர்வும், சர்வதேச இடைப்படுத்தல் என்ற விடயங்கள் அடங்கியிருந்தது. இந்த பின்னணியில்தான் இந்த மார்ச் மாதத்தில் மனித உரிமை சபை அமர்வுகள் இடம்பெற்றன. தீர்மானம் நிறைவேற்றப்பட்ட பின் கடந்த 18 மாதங்களில் ஏற்பட்டுள்ள மாற்றங்களைப்பற்றி மனித உரிமை ஆணையாளர் விரிவான அறிக்கையொன்றை சமர்ப்பித்திருந்தார். இலங்கையும் எழுத்து மூல அறிக்கையொன்றை தாக்கல் செய்திருந்தது.

எமது அபிப்பிராயமும் கேட்டறியப்பட்டது. 2015 ஜெனீவா தீர்மானத்தில் கூறப்பட்டிருக்கும் விடயங்கள் பலவும் யுத்த குற்ற விசாரணை என்ற ஒரு விடயத்தை தவிர்த்து, மிகுதியனைத்தும் இலங்கை அரசாங்கத்தால் நிறைவேற்றப்பட வேண்டியவை. பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்குதல், காணாமல் போனோரை கண்டறிதல், புதிய அரசியலமைப்பு உருவாக்கம் என்பனவற்றை எந்த சர்வதேச பொறிமுறைகளைக் கொண்டும் செயற்படுத்தி விட முடியாதவை. இவை அனைத்தும் தமிழர்களின் அத்தியாவசிய தேவைகள். இவற்றில் பலவற்றில் பகுதியளவில் முன்னேற்றம் ஏற்பட்டிருக்கின்றன.

ஆகவே இவற்றைச் செவ்வனே செயற்படுத்தி முடிக்க வேண்டுமேயானால் இலங்கை மீது சர்வதேச கண்காணிப்பை நீடிப்பதை தவிர வேறு வழியிருக்கவில்லை. 2015 தீர்மானத்தை, பூரணமாக நிறைவேற்றுவதற்கே கால அவகாசம் வழங்கப்பட்டிருக்கின்றது. அத் தீர்மானத்தின் வலு குறைக்கப்படவில்லை. மேலும் தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு கால அவகாசம் வழங்குவதனால், கடுமையான சர்வதேச மேற்பார்வை அத்தியாவசியம் என்பதையும் ஒவ்வொரு சரத்தும் எப்போது நடைமுறைப்படுத்தப்படும் என்பதையும் விபரிக்கும் காலஅட்டவணையொன்று தயாரிக்கப்பட வேண்டுமெனவும் வலியுறுத்தியிருந்தது.

**இலங்கையை சர்வதேசகுற்றவியல் நீதிமன்றத்தில் பாரப்படுத்துவது சாத்தியமானதா?**

இலங்கைக்கு கால அவகாசம் வழங்கியது அயோக்கியத்தனம் என்றும் மாறாக இலங்கையை ஐக்கியநாடுகள் பாதுகாப்பு சபைக்கூடாக சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் பாரப்படுத்தியிருக்க வேண்டும் என்றும் சிலர் இடித்துரைத்து வருகின்றார்கள்.

மனித உரிமைகள் பேரவையில் நடப்பது வெறுமனமே இந்த அரசாங்கத்தை ஆட்சியில் நிலைத்திருக்க செய்வதற்காக மேற்குலகால் நடாத்தப்படும் கபட நாடகம் என்றும், தமிழர்களின் பிரதிநிதியாக தமிழ்தேசிய கூட்டமைப்பு மனித உரிமைகள் பேரவைச் செயன்முறையை நிராகரிக்கும் பட்சத்தில், இலங்கையை அமெரிக்கா பொதுச் சபையூடாக பாதுகாப்பு சபைக்கு அனுப்பி, அங்கிருந்து குற்றவியல் நீதிமன்றத்துக்கு பாரப்படுத்தும் நிர்ப்பந்தம் நேரிடும் என்றும் பூகோள அரசியல் பண்டிதர்கள் பலரும் வகுப்பெடுத்து வருகிறார்கள்.

சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் இலங்கையைப் பாரப்படுத்துவது என்பது இன்றைய நிலவரங்களின்படி முற்றிலும் இயலாதகாரியம். இது தமிழ்தேசியக் கூட்டமைப்பின் உறுதியான கணிப்பு. பிரதானமாக பாதுகாப்பு சபைக்கு மட்டுப்படுத்தப்பட்ட அதிகாரங்களே உள்ளன. அத்தியாயம் 7 இன்படி உலக சமாதானத்திற்கும் பாதுகாப்புக்கும் அச்சுறுத்தல் ஏற்படும் வேளைகளில் மாத்திரமே பாதுகாப்புச் சபை ஒரு நாட்டின் உள்நாட்டு விடயங்களில் தலைபோடுவதற்கு இடமிருக்கின்றது. இன்றைக்கு இலங்கையால் உலகப்பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் உண்டு என்று எவரும் கூறமுடியாது.

இதனால் இலங்கையை பாதுகாப்புச் சபையினூடாக சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்குப் பாரப்படுத்துவது என்பது நடக்கப்போகும் விடயமல்ல. இலங்கையில் யுத்தம் நடந்து கொண்டிருக்கும் காலத்தில் கூட அப்படி இந்த விடயத்தில் இலங்கை விகாரத்தால் உலக சமாதானத்திற்கும் பாதுகாப்புக்கும் அச்சுறுத்தல் என்று எம்மால் அர்த்தப்படுத்திக் காட்டிருக்க முடியாது. சரி அதையும்மீறி அந்த தடைகளையும் தாண்டி இந்த விவகாரத்தை பாதுகாப்பு சபைக்கு எடுத்துசெல்லலாம் என்று வைத்துக் கொள்வோம், பாதுகாப்புச்சபையில் வீட்டோ அதிகாரத்தை சீனா, ரஷ்யா பயன்படுத்தும் என்கிறார்கள். சரி அவற்றை விடுங்கள் பிறகு பார்த்துக்கொள்ளலாம். பாதுகாப்பு கவுன்சிலில் வீட்டோ அதிகாரம் கொண்ட மற்றைய மூன்று நாடுகள், பிரான்ஸ், பிரிட்டன், அமெரிக்கா இந்த நாடுகள் ஐ .நா மனித உரிமைகள் கவுன்ஷில் ஊடாக நகர்த்தவே முயற்சிக்கின்றன.

அதனை உதாசீனம் செய்து ஒதுக்கி, ஐ நா பாதுகாப்பு கவுன்ஷிலுக்கு கொண்டு சென்றால், இந்த மூன்று நாடும் எம்மை நிராகரிக்கா என்று எப்படி கூறமுடியும். நியாயம் கிடைப்பதற்கான வாய்ப்பு மிக அரிதாக உள்ள ஒரு பொறிமுறைக்கு எடுத்த எடுப்பிலே செல்லமுடியாது.முதலில் சர்வதேசத்துடன் சேர்ந்து ஓடி அவர்களைக்கொண்டே விடயத்தை ஒப்பேற்றவேண்டும்.

ஏன் இன்று வடகொரியா அணு ஆயுதங்களை வைத்துக்கொண்டு போர்முரசு கொட்டுகின்ற வேளையிலும்கூட, சீனா தன் வீட்டோ அதிகாரத்தை பயன்படுத்தி வட கொரியாமீது எந்த நடவடிக்கையும் எடுக்க விடாமல் தடுத்து வருகின்றது? சிரியாவில் இரசாயன ஆயுத பாவனை தொடர்பில் பாதுகாப்பு சபையின் தலையீட்டுக்கு சீனா, ரஷ்யா என்பவை தமது வீட்டோ அதிகாரத்தால் தடுத்து வருகின்றன? இப்படியிருக்க இலங்கையை சர்வதேசக்குற்றவியல் கூண்டில் ஏற்றுவது வெறும்பகற்கனவே.

**அமெரிக்கா இலங்கை அரசாங்கத்தை தொடர்ந்து ஆட்சியில் வைத்திருப்பதற்காக மாத்திரம் கபடநாடகமாடி வருவதாக ஒரு வாதம் எழுகின்றதே?**

மனித உரிமை பேரவையில் அமெரிக்கா இலங்கை அரசாங்கத்தை ஆட்சியில் தொடர்ந்து வைத்திருப்பதற்காக மாத்திரம் மாபெரும் கபட நாடகமாடி வருகின்றதென்ற வாதத்தை எடுத்துக்கொள்வோம், நாம் ஒரு போதும் அமெரிக்கா இலங்கை தமிழர்களுக்காக, வியர்வை சிந்துவதாக சொல்லவில்லை. அமெரிக்காவின் நலன்களும் எமது நலன்களும் ஒத்திசைக்கும் வரை ஒத்து ஓடுவோம் என்பது தான், தமிழ் தேசியக்கூட்டமைப்பின் நிலைப்பாடு. ஆனால் தமிழ்தேசியக்கூட்டமைப்பு மனித உரிமைகள் பேரவையில் முன்னெடுக்கப்படும் செயன்முறையை சட்டென நிராகரிப்பதால் மாத்திரம் அமெரிக்கா நிலைகுலைந்து சர்வதேச குற்றவியல் பொறிமுறைக்கு இலங்கையை ஒப்புவிக்கும் நிலைக்கு வந்துவிடும் என்பது மந்தபுத்திக் கருத்து.

இதைத்தாண்டி இந்தியா வெளிப்படையாகவே அண்மைய வரலாற்றில் பலமுறை இலங்கைக்கு எதிராக சர்வதேச குற்றவியற் பொறிமுறையொன்றை நிறுவ இடமளிக்கப் போவதில்லைஎன்பதைகூறியிருக்கின்றது.இறுதியாக சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திடம் எல்லாத் தடைகளையும் மீறி இலங்கையை கொண்டு நிறுத்த முடிகின்றது என்று வைத்துக் கொள்வோம்(நடக்கப்போவதில்லை)2015 ஜெனீவாத் தீர்மானத்தில் சொல்லப்பட்டிருக்கும் மீதியான விடயங்கள் குறித்தும் இலங்கை அரசிற்கு யாரும் அழுத்தம் கொடுக்கமுடியாது.

அவையனைத்தும் தூக்கி யெறியப்படும் பொதுவாக சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் ஓரிரு முக்கியதலைவர்கள் மீதே வழக்கு தொடுக்கப்படுவது வழக்கம். அவ்வாறு தொடுக்கப்பட்டு குற்றவாளியெனத் தீர்க்கப் பட்டாலும் இறுதியில் அவர்களை தண்டிப்பதற்கு குறித்த நாட்டின் அனுமதி அவசியம். சூடானின் ஜனாதிபதி அல்பஷீர் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தினால் சர்வதேச பிடியாணை வழங்கப்பட்டு, பத்து ஆண்டுகள் கடந்து விட்டபோதிலும், இதுவரை அவரை கைது செய்யவோ தண்டிக்கவோ முடியவில்லை. ஆகவே போர்க்குற்றங்களால் பாதிக்கப் பட்டோருக்குசர்வதேசகுற்றவியல்நீதிமன்றத்தினூடாக பயன்கிட்டப் போவது சாத்தியமற்றதே. சர்வதேச நீதிமன்றத்தில் இலங்கையைப் பாரப்படுத்தவேண்டும் என்று துடிப்பவர்களின் நயவஞ்சக நிகழ்சி நிரலொன்றிருப்பது மட்டும் வெளிச்சம்.



**பொறுப்புக்கூறலும் தமிழ் தேசியக்கூட்டமைப்பின் செயற்பாடுகளும் குறித்து விளக்கமுடியுமா?**

பொறுப்புக்கூறல்தொடர்பாக தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் செயற்பாடுகளைக் குறித்து பல்வேறு விமர்சனங்கள் முன் வைக்கப்பட்டு வருகின்றன. தமிழர் நலன்களைப் பிரதி நிதித்துவப்படுத்துவதை விடுத்து கூட்டமைப்பு சர்வதேச அரங்கில் தமிழரைப் பணயம் வைப்பதாக சிலர் தீவிரப் பிரசாரம் செய்து வருகின்றனர்.

மேற்குலகிற்கு வேண்டப்பட்ட இந்த அரசாங்கத்தை ஆட்சியில் தக்க வைப்பதற்கென மனித உரிமைகள் பேரவையில் நடாத்தப்படும் கபட நாடகத்தில் கூட்டமைப்புத் தலைமை, தமிழரைத் தாரை வார்ப்பதாக கண்டனக் குரல்கள் எழுப்பப்பட்டுக் கொண்டிருகின்றன. ஆனால் இது வொன்றும் புதிதல்லவே. இதுவரை மனித உரிமைகள் பேரவையில் நிகழ்ந்தேறிய அனைத்தின் பின்னும் எமது காத்திரமான பங்களிப்பிருந்திருக்கின்றது.

2010 பொதுத்தேர்தலின் பின்னர் கூட்டமைப்பு பின்பற்றிய மிதவாத மென்வலு அரசியற்போக்கு சர்வதேசத்தின் ஆதரவைத் தமிழர் பக்கம் திருப்பியிருந்தது. 2012 மார்ச் மாதம் இலங்கை அரசை கேள்வி கேட்கும் தீர்மானம் நிறைவேற்றுவதற்கு, சில மாதங்களுக்கு முன்னர் தமிழ்தேசியகூட்டமைப்பு, அமெரிக்காவிற்கு உத்தியோக அழைப்பொன்றை மேற்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

**தமிழ்தேசியக் கூட்டமைப்பு மனித உரிமை பேரவை உறுப்பு நாடுகளின் வெளிவிவகார அமைச்சர்களை தனித் தனியே சந்தித்து, உண்மையை விளக்கி தீர்மானம் நிறைவேற்ற வாக்குப்பலத்தை உறுதி செய்ததுடன், தீர்மானத்தின் உள்ளடக்கங்கள் எமது நேரடி வேண்டுதலின் கீழ் சேர்த்துக் கொள்ளப்பட்டன.**

தீர்மானத்தை உருவாக்குவதற்கு தேவையான சகல எழுத்துவடிவ ஆவணங்கள், சாட்சியங்கள் இரகசியமாக சேர்க்கப்பட்டு, ஜெனீவாவுக்கு அனுப்பிவைக்கப்பட்டன. 2012 தீர்மானம் படிப்படியாக 2014 தீர்மானமாக உருவெடுத்தது. ராஜபக்ஷ அரசாங்கத்தின் முகவர்களாக, அங்கு செயற்பட்ட சிலரின் குழப்பகரமான நடவடிக்கைகளால் சர்வதேச விசாரணையைத் தாங்கி வந்த அத்தீர்மானத்தின் ஆரம்ப வரைபுகளை ஓரிரு தமிழ் குழுக்களைத் தவிர்த்து அனைவரும் எதிர்த்திருந்தார்கள் .தீர்மானத்தின் பிரதிகளைப் பவனியாகத் தாங்கி வந்து கொளுத்தி எரித்தார்கள்.

இத் தீர்மானம் ஆட்சி மாற்றத்திற்கானதேயன்றித் தமிழர்களுக்கானதல்ல என்று, எழுந்த கூக்குரல்கள் சர்வதேச நாடுகளிடையே பலத்த குழப்பத்தை ஏற்படுத்தின .தமிழர்களே எதிர்க்குமோர் தீர்மானத்தை நிறைவேற்றுவதால் பயனில்லை என்று பலநாடுகள் ஒதுங்கிய வேளை, தமிழ்தேசியக் கூட்டமைப்பு மனித உரிமை பேரவை உறுப்பு நாடுகளின் வெளிவிவகார அமைச்சர்களை தனித் தனியே சந்தித்து , உண்மையை விளக்கி தீர்மானம் நிறைவேற்ற வாக்குப்பலத்தை உறுதி செய்ததுடன், தீர்மானத்தின் உள்ளடக்கங்கள் எமது நேரடி வேண்டுதலின் கீழ் சேர்த்துக் கொள்ளப்பட்டன. பாதிக்கப்பட்டவர்கள் பலரது சாட்சியங்களையும் கொண்டு சேர்த்ததும் கூட்டமைப்பே. 2015 செப்டம்பர் மாதம் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் வரைபில் சிலபரிந்துரைகளை நீக்க இலங்கை அரசாங்கம் கடும்முயற்சிகளை மேற்கொண்டது.

குறிப்பாக சர்வதேச நீதிபதிகள் வழக்குதொடுனர்கள் விசாரணையாளர்கள் நீதிப் பொறிமுறையில் பங்குபற்ற வேண்டும் என்ற சரத்தினை நீக்க முயன்றது. மேலும் ஜெனீவாவில் இருந்து தனது பிரதிநிதிமூலம் பந்தி 6 இல் இருக்கும் சர்வதேச சட்டம் பற்றிய குறிப்புக்களை இலங்கை அரசு நீக்க கடும் முயற்சி எடுத்தது இம் முயற்சிகளை ஜெனீவாவில் நாமே முறியடித்தோம். அத்தீர்மானத்தில் இருக்கும் பல பதங்கள் சொற்பிரயோகங்கள் குறிப்பாக சர்வதேச வகிபாகம் மற்றும் சர்வதேச சட்டம் தொடர்பான சரத்துக்கள் நீண்ட கலந்துரையாடல்களின் பின்னர் நேரடியாக தமிழ் தேசியக் கூட்டமைப்பினால் தீர்மானத்தில் எழுதப்பட்டவை.

மார்ச் 2019 வரை இலங்கை மீது நீடிக்கப் பட்டிருக்கும் சர்வதேச மேற்பார்வையின் போது HRC 30/1 இலும் A/HRC/RES/34/1 இலும் இலங்கை பொறுப்பெடுத்துக் கொண்ட அனைத்து விடையங்களையும், முறையாக நிறைவேற்றப் பண்ணுவதற்கான செயற்திட்டங்களை நாம் வகுக்க வேண்டும் ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானிகர் அலுவலகத்தோடும் இத் தீர்மானங்களை முன்னின்று வரைந்து நிறைவேற்றிய முக்கியநாடுகளோடும் இந்தியா வோடும் இணைந்து இவற்றை முற்றாக நடைமுறைப்படுத்துவதில் நாம் வெற்றி காணவேண்டும்.

நேர்காணல்
எஸ்.சச்சிதானந்தகுமார்